மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை), எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நான்கு மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி

காஞ்சிபுரம் மாவட்டம், மௌலிவாக்கத்தில் தனியார் கட்டடம் இடிந்து விழுந்தது—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற உறுப்பினர்கள் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் பேசவேண்டும் என்று சொல்லியும், அவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற விதமாகப் பேசவேண்டும் என்று எத்தனையோ முறை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் எடுத்துச்

@ 214 முதல் 313 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் II, III மற்றும் IV ஆக அச்சிடப்பட்டுள்ளன.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2014 ஜூலை 10

சொல்லியும், அவர்கள் அனைவரும் எழுந்து நின்று, இந்தச் சபை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற வகையில், இன்றைக்கு அவர்கள் சபையில் நடந்து கொண்டது விரும்பத்தகாத நிகழ்ச்சி. ஆனால், கடந்த மைனாரிட்டி இ.மு.க. ஆட்சியில் ஒரு பிரச்சினை குறித்து இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜன் அவர்கள் பேச எழுந்தபோது, அப்போது இருந்த மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் "மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன், Commission போட்டிருப்பதால் அவையிலே அந்த subject–ஐப் பேசக் கூடாது. விடுங்கள். அடுத்த subject–க்குப் போங்கள். எதைப்பற்றியும் பேசக் கூடாது. . . . மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது" என்று கூறியிருக்கிறார்கள். அதன் பின்னர் மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ.க. மணி, மாண்புமிகு மின்சாரம் மற்றும் வரகத் தொழில் துறை அமைச்சர் என்று பெயர் குறிப்பிட்டு அவர்களது உரையெல்லாம் இருக்கின்றது. ஆக, ஏற்கெனவே, ஒரு பொருள் குறித்து, ஒரு பிரச்சினை குறித்து விசாரிப்பதற்கு கமிஷன் போடப்பட்டிருந்தால், அந்தப் பிரச்சினை குறித்து இந்த அவையில் பேசுவதற்கு யாருக்கும் உரிமை இல்லையென்பதை கடந்த காலத்தில், மைனாரிட்டி இ.மு.க. ஆட்சியில் இருந்தபோதே இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள் என்பதனை இந்தச் சபையிலே எடுத்துக் கூறுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–50

நான் ஏற்கெனவே இங்கே கூறிய கருத்துகள் சட்ட பேரவை விதி 66 இல் "No motion which seeks to raise discussion on a matter pending before any statutory Tribunal or statutory authority performing any judicial or quasi judicial functions or any Commission or Court of Enquiry, appointed to enquire into or investigate any matter shall ordinarily be permitted to be moved" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளேன்.